பட்டதாரி ஆசிரியர் வாண்மை
விருத்தி அமைப்பு

அதிபர் போட்டிப் பரீட்சைக்கான
வழிகாட்டல் பயிலமர்வு

05.05.1999

# பொது அறிவு

தொகுப்பு :

A. C. George

B. A. (Hons) Dip in Ed.

# ERC (Educational Reform Commission)

இலங்கையில் கல்வி சீர்திருத்த ஆணைக்குழு 1991ம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1992 ல் மூன்று அறிக்கைகள் வெளியிட்டது:

1) பொதுக் கல்வி மீதான தேசியக் கொள்கை
2) பல்கலைக்கழக கல்வி மீதான தேசியக் கொள்கை
3) தொழில்நுட்ப, தொழிற் பயிற்சி மீதான தேசியக் கொள்கை 1997ம் ஆண்டு கல்விச் சீர்திருத்த ஆண்டாக Year for education reforms) பிரகடனப்படுத்தப்பட்டது.

# கல்விக் கொள்கையாக்கம்

உலகில் கல்விச் சீர்திருத்தங்கள் தேவைகள் பற்றி அரசாங்கங்களுக்கு ஆலோசனை கூறவும், புதிய திட்டங்கள், கொள்கைகளை அமுல்படுத்தவும் பல நாடுகள் இதற்கென நன்கு வளர்ச்சியடைந்த அமைப்புக்களைக் கொண்டுள்ளன.

1) ஜப்பான் – NIER (National Institute for educational research)
2) அவுஸ்திரேலியா – ACED (Australian council for educational development)
3) இங்கிலாந்து – IE (Institute of Education)
4) இலங்கை – 1985 ம் ஆண்டு 28 ம் இலக்க சட்டப்படி (NIE) தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கப்பட்டது.

# G – 15 நாடுகள்

1989 ம் ஆண்டு பெல்கிறேட் நகரில் G – 15 நாடுகள் குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. 1999ம் ஆண்டு மார்சு மாதம் 10ம் திகதி இலங்கையும் ஒரு அங்கத்துவ நாடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஏனைய அங்கத்துவ நாடுகளாவன அல்ஜீரியா, ஆஜன்ரீனா, பிறேசில், சிலி, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, ஜமெய்கா, கென்யா, நைஜிரியா, மலேசியா, மெக்சிக்கோ, பெரு, செனகல், வெனிசூலா, சிம்பாப்வே.

# யூரோ நாணயம்

ஐரோப்பிய ஒன்றியத்தினால் (Europien Union) வெளியிடப் பட்டுள்ள சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்தக் கூடிய புது நாணயமே யூரோ (EURO) ஆகும். 1999 ல் ஜனவரியில் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண புழக்கத்திற்கான தாள், நாணயக் குற்றி வடிவங்களில் 2002 ம் ஆண்டு July மாதம் 1 ம் திகதி முதலே புழக்கத்திற்கு வரும். இவ்வாண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போது புழக்கத்திலுள்ள அவ்வவ் நாட்டு நாணயங்கள் புழக்கத்தில் இருந்து நீங்கி விடும். யூரோ நாணயத்தின் வருகை அமெரிக்க டொலர் யப்பான் யென் நாணயங்களின் செல்வாக்கை ஐரோப்பாவில் குறைக்கும்.

# தென் ஆபிரிக்காவின் புதிய அதிபர்

1999 ம் ஆண்டு June மாதம் 16ம் திகதி தபோ எம்பக்கி என்பவரிடம் தென் ஆபிரிக்காவின் அதிபர் பதவி கைமாற்றப்படும் புகழ்பூத்த கறுப்பர் மகன் நெல்சன் மண்டேலா அன்று ஓய்வு பெறுகிறார்.

# குளோனிங் - ஆண் எலி

குளோனிங் முறை மூலம் முதல் முறையாக ஆண் எலி ஒன்றை ஜப்பானிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். டைபிறோ என்ற ஆண் எலியினை இனப்பெருக்கத் தொகுதியல்லாத உடல் உறுப்புக் கலத்தில் இருந்தே ஆண் எலி குளோன் செய்யப்பட்டது. டொலி ஆடு, குமுலினா எலி என்பன குளோனிங் செய்யப்பட்ட பெண் விலங்குகளாகும்.

# C. T. B. T.

CTBT என சுருக்கமாக அழைக்கப்படும் (Comprihensive Test Ban Treaty) பூரண அணு ஆயுத பரவல், வெடிப்பு, பரிசோதனை தடை ஒப்பந்தமாகும். இது 1997 ல் நிறைவேற்றப் பட்டது. அணுயுத்தமொன்றின் விளைவுகளைத் தடுக்கவும் அணு ஆயுதப் பரவலை தடுக்கவும் வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதினால் ஐ. நா. சபையும் அமெரிக்காவும் இணைந்து இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றது. சமீபத்தில் அணுப் பரிசோதனை நடத்திய இந்தியாவும், பாகிஸ்தானும் பல காரணங்களைக் கூறி இவ் உடன்படிக்கையில் கையெழுத்திடாமல் இழுத்தடித்து வருகின்றன.

# உலகமயமாதல் (Globaligation)

தகவல் தொழில்நுட்ப புரட்சியின் விளைவாக உலகமானது சுருங்கி "உலகக் கிராமம்" (Glopal villege) என்றவாறு மாறி வருகின்றது. கணனி, இன்டநெட், E – மெயில் என்பனவற்றுடன் உலகம் மிக சுருங்கி விட்டது. WTO என்னும் வர்த்தக அமைப்பு, சுங்க கூட்டுக்கள், சுதந்திர வர்த்தக பொருளாதாரம், பிராந்தியக் கூட்டமைப்புக்கள் என்பன இன்று நாடுகளின் எல்லைகளை இல்லாமல் ஆக்கி விட்டிருப்பதுடன் அரசியல், பொருளாதார, கலாச்சார தொழில் நுட்ப விடயங்கள் உலகமயமாக்கலுக்கு உட்பட்டுள்ளன.

# நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி
# (Sustainable development)

பொருளாதார வளர்ச்சிக்கும் சூழல் பாதுகாப்பிற்கும் இடையிலான சமநிலையை பேணும் நோக்குடன் சூழலியலாளர்களினால் முன் வைக்கப்பட்ட பதம் "நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி" என்பதாகும். நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பதினை பின்வருமாறு வரையறுக்கலாம். "எதிர்கால சந்ததியினரின் தேவைகளுக்கு விட்டுக் கொடுப்பதன் மூலம் நிகழ்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல். இயற்கை வளங்கள் நிகழ்கால சந்ததியினர்க்கு மட்டும் உரித்துடையது அன்று. அத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் சூழல் அழிவுகள் தோற்றுவிக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# ஒட்டாவா உடன்படிக்கை

உலகமெங்கும் மிதிவெடிகளை ஒழிப்பதற்கான உடன்படிக்கை ஒட்டாவா உடன்படிக்கை எனப்படும். 1999 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1ம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது. மிதிவெடியின் பாவனை, உற்பத்தி சேகரித்து வைத்தல் கைமாற்றம் செய்தலை தடை செய்யும். 134 நாடுகள் இதனை ஏற்றுள்ளன 65 நாடுகள் இதனை சட்டபூர்வமாக்கியுள்ளனர். 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் அரச சார்பற்ற அமைப்புக்கள் இணைந்து நிலக்கண்ணிக் எதிர்ப்பு என்ற ஒரு அமைப்பினையும் உருவாக்கினர். இப்பங்களிப்புக்காக 1997ம் ஆண்டு இவ்வியக்கத்திற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

# சேது சமுத்திரத் திட்டம்

சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் இப்போது இந்திய பாதுகாப்பு அமைச்சரினால் சேது சமுத்திரத் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டையும் இந்திய உபகண்டத்தினையும் பாக்கு நீரிணை இணைத்து நிற்கின்றது. பாரிய கப்பல்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையுள்ளது. இப்பகுதி இயந்திரங்கள் மூலம் சூழப்படுத்தப்பட வேண்டும். 1921ம் ஆண்டு சென்னை மாநிலம் இத்திட்டத்தினை ஆராய்ந்து பல தடவைகள் இத்திட்டம் பற்றிய முயற்சிகள் மேற்கொண்ட போதும் தற்போதைய இந்திய அரசு இதில் நடவடிக்கை எடுத்துள்ளது.

# இலங்கையில் பொதுக் கல்வி குறித்த புள்ளிவிபரங்கள்

| இல | விடயம் | ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | | 1948 | 1970 | 1996 |
| 01 | அரச பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை | 3,091 | 9,928 | 10,280 |
| 02 | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (000) | 1,178 | 2,716 | 4,289 |
| 03 | ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை இதில் | 32,704 | 96,426 | 1,95,203 |
| 04 | பட்டதாரிகளின் % | 3.0 | 7.7 | 23.8 |
| 05 | பயிற்றப்பட்ட மொத்த ஆசிரியர்கள் % மாக | 29.3 | 50.5 | 68.1 |
| 06 | மாணவ / ஆசிரியர் விகிதம் | 36 | 28 | 22 |
| 07 | ச. கி. பள்ளிக்கூடம் | 22 | 7 | 6 |

| விடயம் | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 1953 | 1971 | 1994 |
| கல்வி அறிவு வீதம் | 65.4 | 78.5 | 90% |

| இல | விடயம் | ஆண்டு | |
|---|---|---|---|
| | | 1948 | 1996 |
| 01 | கல்வி மீதான செலவினம் மொ. உ. உ. சதவீதமாக | 3 | 2.7 |
| 02 | மொத்த அரச செலவினத்தின் சதவீதமாக | 2.9 | 9.3 |

# கம்பியூட்டர் வைரஸ்

26.05.99 அன்று இலங்கை உட்பட பல நாடுகளை தாக்கிய கம்பியூட்டர் வைரஸ் செனோபல் அல்லது ஸ்பேஸ் கில்லர் அல்லது CIH வைரஸ் என அழைக்கப்படுகின்றது. கணனிகளின் செயற்பாட்டை குழப்ப சென் என்பவரால் இன்ரநெட், E – மெயில் ஊடாக பரவ விடப்பட்ட கம்பியூட்டர் வைரஸ் புராகிறேமே இது. இதனை பரவவிட்டவர் தற்போது மன்னிப்புக் கேட்டுள்ளார்.

# நேட்டோ - 1999

1) ஐ. அமெரிக்கா
2) ஐக்கிய இராச்சியம்
3) போர்த்துக்கல்
4) ஸ்பெயின்
5) பிரான்ஸ்
6) லக்ஸ்ஸம்பேக்
7) கனடா
8) பெல்ஜியம்
9) நெதலாண்ட்
10) ஜெர்மனி
11) டென்மார்க்
12) நோர்வே
13) இத்தாலி
14) கீறிஸ்
15) துருக்கி
16) செக்குடியரசு
17) போலந்து
18) கங்கேரி

# நேட்டோ 2003 - 2005 ல்

வேறு மூன்று புதிய நாடுகள் கூட்டமைப்பில் இணையும்.

1) ஸ்லோவேனியா
2) எஸ்டோனியா
3) லித்துவேனியா

# ஐரோப்பிய சமூகம் (Eu) – 1999 ல்

1) இத்தாலி
2) அயர்லாந்து
3) பிரித்தானியா
4) போர்த்துக்கல்
5) ஸ்பெயின்
6) பிரான்சு
7) லக்ஸம்பேக்
8) பெல்ஜியம்
9) நெதலாண்ட்
10) டென்மார்க்
11) ஜெர்மனி
12) இத்தாலி
13) கிறிஸ்
14) சுவீடன்
15) பின்லாந்து
16) அவுஸ்திரியா

# ஐரோப்பிய சமூகம் 2003 - 2005

புதிய சில நாடுகள் இவ்வமைப்பில் நிரந்தர உறுப்புரிமை பெறும்

1) ஸ்லோவேனியா
2) எஸ்டோனியா
3) லித்துவேனியா
4) லட்வியா
5) ருமெனியா
6) பல்கேரியா
7) சுலோவேக்கியா (Slovakia)

# இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

மனித உரிமைகளை மேம்படுத்தும் நடவடிக்கையாக சி. பா. அ. சபை 1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறுவப்பட்டுள்ளது.

# Y2K பிரச்சினை

மில்லனியம் பக் அல்லது Y2K என அழைக்கப்படும் பிரச்சினை 2000 ஆண்டு ஆரம்பமாகும் போது உலகிலுள்ள பல கம்பியூட்டர்கள் செயலிழந்து போகும் பிரச்சினையை குறிக்கும். சாதாரணமாக திகதியினை எழுதும்போது கடைசி இரண்டு இலக்கங்களையே எழுதுவது வழக்கம். உ+ம் : 31.12.99. 2000ம் ஆண்டில் ஜனவரி 1ம் திகதி 01.01.00 என்று எழுதப்படும். இதற்கு முன்னர் (00) 19 ஐச் சேர்த்தால் கிடைக்கும் ஆண்டு 1900 என்று ஆகிவிடும்.

கம்பியூட்டரில் தங்கியிருக்கும் நாடுகள் அனைத்திற்கும் இப்பிரச்சனை ஏற்பட வாய்ப்புண்டு.

# ஒட்டாவா உடன்படிக்கை

மிதிவெடிகளை ஒழிக்கும் சர்வதேச உடன்படிக்கை. 134 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. அமெரிக்காவும் இலங்கையும் இன்னும் கைச்சாத்திடவில்லை. வருடாந்தம் 24000 பேர் மிதிவெடியினால் பாதிப்புக்குள்ளாகின்றனர். நோபல் பரிசுபெற்ற ஜெடிவில்லியம் என்பவரின் முயற்சியினால் இவ்வுடன்படிக்கை கைச்சாத்தானது.

# சப்டா (SAPTA)வும் (SAFTA) சவ்டாவும்

1991ம் ஆண்டு சார்க் SAARC மகாநாட்டில் South Asien Freferential Trade Arrangment என்னும் சார்க் நாடுகளுக்கான வர்த்தக கூட்டுறவு உடன்பாடு. இவ்வுடன்பாடு மேலும் முழுமையான வர்த்தக தடைகளை நீக்கி சுதந்திரமான ஒரு வர்த்தக ஒழுங்கினை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் 2001ம் ஆண்டில் SAFTA என மாற்றமடையும். இது South Asien Free Trade Are எனப் பெயர் மாறும்.

# சிட்டகொங் சமாதான ஒப்பந்தம்

வங்காள தேசத்தின் சிட்டகொங் மலைப்பிரதேச சங்மா மக்களின் சுயஆட்சிக்கான ஆயுதப் போராட்டம் சிட்டகொங் உடன்படிக்கையின்படி கைவிடப்பட்டு, அப்பிரதேசம் மலைவாசி மக்களின் சுயநிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வழி ஏற்பட்டது.

01. ஐரோப்பா எங்கும் 1999.01.01 முதல் தனியான பொது நாணய முறை அமுலுக்கு வந்துள்ளது. அதன் பெயர் என்ன?
யூரோ

02. Eu என ஆங்கில எழுத்தில் குறிப்பிடப்படும் சர்வதேச அமைப்பின் விரித்த பதம் என்ன?
Europien union

03. "காமசூத்திரா" என்னும் சர்ச்சைக்குரிய இந்தியத் திரைப் படத்தின் இயக்குநர் யார்?
மீராநாயர்

04. உலகில் 50 மொழிகளில் வெளிவரும் The Adventure of Tintin (சிறுவர் காட்டூன்) சாகசக் கதைகளின் ஆசிரியர் யார்?
Herge

05. யப்பான் நாட்டின் தற்காப்புச் சண்டைக் கலையாக கராத்தே இருப்பது போல் கொரிய நாட்டின் தற்காப்பு சண்டைக் கலையாக இருப்பது எது?
தாய்கொன்டே

06. UNESCO அமைப்பின் பணிப்பாளர் மே மாதம் ஓய்வு பெறுகின்றார். அவரின் இடத்திற்கு இலங்கையை சேர்ந்த ஒருவர் போட்டி போடுகின்றார். அவர் யார்?
சேனக பண்டார நாயக்கா.

07. 07.05.99 அன்று மீண்டும் ஒரு ஏற்றுமதி செய்முறை வலயம் ஒன்று இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எவ்விடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது?
வத்துபிட்டிவெல

08. கம்பியூட்டர் விற்பனையில் உலகில் முன்னணி வகிக்கும் பிரபல்யமான அமெரிக்க Company எது?
IBM

09. 1993ம் ஆண்டு 25 ஆண்டுகள் சிறையிலிருந்து பின்னர் சமாதானத்திற்கான நோபல் பரிசினை பெற்றவர் யார்?
நெல்சன் மண்டேலா

10. இங்கிலாந்தில் Downing Street No. 10 எதற்கு முக்கியத்துவம் உடையது?
பிரதமரின் வாசஸ்தலம்

11. ஹிதுறு சர்வதேச விமான நிலையம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
இங்கிலாந்து

12. 52 நட்சத்திரங்களையும் 13 வரிக் கோடுகளையும் கொண்டுள்ள தேசியக்கொடி எந்த நாட்டினுடையது?
U. S. A.

13. தென் ஆபிரிக்காவின் தலைநகர் எது?
Priotria

14. இருதய மாற்று சிகிச்சை முறையினை முதன்முதலில் செய்து காட்டியவர் யார்?
கிறிஸ்ரியன் பெனாட்

15. ஜிப்சத்தின் இரசாயனப் பெயர் என்ன?
கல்சியம் சல்பேட்

16. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு என அழைக்கப்படும் நாடு எது?
சுவீடன்

17. 13வது ஆசிய விளையாட்டு போட்டியில் பங்குபற்றி 400 m ஓட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்ற இலங்கை வீரர் யார்?
சுகத் திலகரத்தினா

18. "கலாச்சுவடு" என்னும் தமிழ் நாட்டின் காலாண்டு இதழின் ஆசிரியர் யார்?
கண்ணன்

19. 1975ம் ஆண்டு கம்பூச்சியாவில் புரட்சி மூலம் பதவிக்கு வந்த தலைவர் சுமார் 20 இலட்ச மக்களின் கொலைக்கு காரணமாகி இருந்தார். அவர் யார்?
பொல்பொட்

20. ஐரோப்பிய யூனியனில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?
15

21. Saving Private Raysn என்ற படத்தின் இயக்குநர் யார்?
ஸ்டீபன் ஸ்பீல்பேக்

22. திரைப்பட வரலாற்றில் அதிக வசூலை ஈட்டிக் கொடுத்த முதல் 20 படங்களில் 7 படங்களுடன் தொடர்புடைய ஒரு இயக்குநர் யார்?
ஸ்வீபேக்

23. தீபா மேத்தா இயக்கிய சர்ச்சைக்குள்ளான இந்தியத் திரைப்படம் எது?
Fire

# GROUP 1

01. முன்னர் பர்மா என அழைக்கப்பட்ட நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
மியான்மா

02. பிரான்சு நாட்டினால் வழங்கப்படும் செவாலியர் விருதினை பெற்ற முதல் இந்தியத் திரைப்பட நடிகர் யார்?
சிவாஜிகணேசன்

03. தரையில் வாழும் மிகப் பெரிய விலங்கு எது?
ஆபிரிக்க யானை

04. இந்தியாவின் நுழைவாயில் எனக் குறிப்பிடப்படும் நகரம் எது?
மும்பாய்

05. முதன் முதல் விண்வெளிக்குப் பயணம் செய்த பெண்மணியின் பெயர் என்ன?
வலன்றினா தெறிஸ்கோப்

06. "போரும் சமாதானமும்" என்னும் நூலை எழுதியவர் யார்?
டொலஸ்ரோய்

07. யூரோ டொலர் நாணயத்தின் மத்திய வங்கி எந்த நகரில் அமைந்துள்ளது?
பிராங்போட்

08. சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் யார்?
திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா

09. 2000 ஆண்டில் கணனியில் ஏற்படப் போகும் பிரச்சனை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
Y 2K or Millenium Bug

10. இலங்கையின் தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வீதம் என்ன?
1.3

11. இலங்கையில் BTT வரிக்குப் பதிலாக தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரியின் பெயர் என்ன?
GST

12. இலங்கையின் அரச திணைக்களம் ஒன்று கூட்டுத்தாபனமாக மாற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. அத்திணைக்களம் எது?
தபால் திணைக்களம்

13. "கூரியர்" என்னும் அறிவியல் இதழினை வெளியிடும் தாபனம் எது?
UNESCO

14. Amnesty International என்னும் சர்வதேச தாபனத்தின் தொழிற்பாடு என்ன?
மனித உரிமைகளை பாதுகாத்தல்

15. உலகின் தற்போதைய NO. I டெனிஸ் வீராங்கனை யார்?
மாட்டினா Hengles

16. இந்தியாவின் சமீபத்திய அணுகுண்டு வெடிப்பு பரிசோதனையை நடத்திய விஞ்ஞானியின் பெயர் என்ன?
அப்துல் கலாம்

17. இந்தியா சமீபத்தில் அணுகுண்டு பரிசோதனையை நடத்தியது. எந்த இடத்தில் அது நடாத்தப்பட்டது.
பொக்ராம்

18. உலக AIDS தினம் எம்மாதத்தில் வரும்?
Dec 1st

19. இலக்கியத்திற்காக புக்கர் பரிசு பெற்ற இந்தியப் பெண்மணியின் பெயர் என்ன?
அருந்ததிராய்

20. "அவிவேக பூரண குரு கதை" என்ற நூலை எழுதியவர் யார்?
வீரமாமுனிவர்

21. 1998 மே மாதம் பாகிஸ்தான் அணுப்பரிசோதனை நடத்தியது. பாகிஸ்தான் அணு ஆயுத திட்டத்தின் தந்தை யார்?
அப்துல்கதிர்கான்

# GROUP 2

01. யூகோஸ்லவேக்கியாவின் சனாதிபதியின் பெயர் என்ன?
சுலோபோடன் மிலோச்சவிகி

02. 25.04.99 அன்று உலகை ஈர்த்த கணனி வைரஸ்சின் பெயர் என்ன?
CIH வைரஸ் or செனோபல் வைரஸ் or Space filler

03. "சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம்" எந்த மாதத்தில் எத்தனையாம் திகதி கொண்டாடப்படுகின்றது?
May 3rd

04. 1998ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் என்ன?
4.7%

05. இலங்கையின் 1998ம் ஆண்டுக்கான தலா நபர் வருமானம் அமெரிக்க டொலரில் எவ்வளவு?
834 U.S.

06. அகதிகளுக்கான தேவைகளை கவனிக்கும் ஐ. நா. சபையின் கிளை தாபனத்தின் பெயர் என்ன?
UNHCR

07. முன்னாள் உலக அதிபார குத்துச் சண்டை வீரர் ஒருவர் தற்போது மீண்டும் சிறைவாசம் அனுபவிக்கின்றார். அவர் யார்?
மைக் டைசன்

08. உலகம் முழுவதும் கண்ணிவெடிகளைத் தடை செய்ய வேண்டும் எனப் பிரச்சாரம் செய்த ஒருவர் 1997ல் நோபல் பரிசு பெற்றார். அவர் யார்?
ஜெடி வில்லியம்

09. "Das Kapital" என்ற நூலை எழுதியவர் யார்?
கால் மார்கில்

10. கீதாஞ்சலி நூலை எழுதியவர் யார்?
ரவீந்திர நாத் தாகூர்

11. குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலைவர் துருக்கி அரசால் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். அவரின் பெயர் என்ன?
அப்துல்லா ஒகலான்

12. இலங்கையின் மிகப் பழைய விமான நிலையம் எது?
இரத்மலானை

13. பெண்களுக்கு முதன்முதல் வாக்குரிமை வழங்கிய நாடு எது?
நியுசீலாந்து (Newzealand)

14. உலகின் முதலாவது பெண் தாதி என அழைக்கப்பட்டவர் யார்?
புளோரன்ஸ் நைடிங்கேல்

15. இலங்கையில் தேசிய அடையாள அட்டை வழங்கும் முறை எவ்வாண்டு அறிமுகமானது?
1972

16. நமது உடலில் குருதி பாயாத பகுதி எது?
கண்ணின் கருமணி

17. உலகின் புனித பூமி என அழைக்கப்படும் நகரம் எது?
யெருசலேம்

18. கண்களை பயன்படுத்தாமல் பறக்கும் பறவை எது?
வெளவால்

19. இந்தோனேசியா நாட்டின் தலைநகர் எது?
யக்காத்தா

20. லுப்தான்சா விமான சேவை எந்த நாட்டிற்குச் சொந்தமானது?
ஜெர்மனி

# GROUP 3

01. 1997ம் ஆண்டு செவ்வாய் கிரகத்தில் தரை இறங்கிய விண்கலத்தின் பெயர் என்ன?
Path finder

02. முதன் முதல் குளோனிங் மூலம் பிறந்த ஆட்டுக்குட்டியின் பெயர் என்ன?
டோலி

03. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என அழைக்கப்படும் நாடு எது?
சுவிஸ்டலாந்து

04. ஆஸ்கார் விருது எத்துறைக்கு வழங்கப்படுகின்றது?
திரைப்படத்துறைக்கு

05. "அன்னா கரிகார்" என்னும் பிரபல நாவலை எழுதியவர் யார்?
டொலஸ்ரோய்

06. சர்வதேச மனித உரிமையின் 50வது ஆண்டு தினம் எவ்வாண்டில கொண்டாடப்பட்டது?
1998

07. இலங்கையில் எத்தனை பல்கலைக்கழகங்கள் உண்டு?
13

08. "ஏயர் லங்கா" விமான சேவை கடந்த வருடம் ஒரு வெளிநாட்டு விமான சேவை நிறுவனத்திற்கு விற்கப்பட்டது. அந்த நிறுவனம் எது?
ஏமிரேட்ஸ் Air Lines

09. இலங்கையின் தேசிய மலர் எது?
Water lilly நீலோற்ப மலர்

10. விண்வெளியில் பயணம் செய்த முதல் தெற்காசிய இந்தியப் பெண் யார்?
கல்பனா சௌலா

11. இலங்கையில் மக்களின் எதிர்பார்க்கப்பட்ட சராசரி ஆயுட்காலம் என்ன?
70 வயது

12. தற்போது நாடு பூராவும் நடைபெற்று வரும் கல்விச் சீர்திருத்தங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் ஆணைக்குழுவின் தலைவர் யார்?
பேராசிரியர் லக்ஸ்மன் ஜெயதிலக்கா

13. 1997ல் செப்டம்பரில் எல்நினோ காலநிலையின் தாக்கத்தினால் காட்டுத் தீ ஏற்பட்டு அதிக நாசம் அடைந்த நாடு எது?
இந்தோனேசியா

14. மெயின் காம் (Mein Kamp) என்னும் நூலை எழுதியவர் யார்?
Aldop Hitler

15. தனியொரு சமயம் என்ற வகையில் உலகில் ஆகக் கூடிய தொகையினர் பின்பற்றும் சமயம் எது?
இஸ்லாம் - 19

16. கடந்த வருடம் பொதுநலவாய அமைப்பு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு தங்கப்பதக்கம் பெற்றுத் தந்த ஓட்ட வீராங்கனையின் பெயர் என்ன?
சுசந்திகா ஜெயசிங்க

17. பல்லில்லாத முலையூட்டி எது?
தேவாங்கு

18. கொண்டிஸ் திரவத்தின் இரசாயனப் பெயர் என்ன?
பொற்றாசியம் பரமங்கனேற்று

19. இலங்கையில் கடைசியாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தின் பெயர் என்ன?
வயம்பா University

20. “கராத்தே” எந்த நாட்டு தற்காப்பு யுத்தக்கலை?
யப்பான்

21. CIS என சுருக்கமாக ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நாடுகளின் விரிந்த பதம் என்ன?
Commonwealth Independent States

# GROUP 4

01. ஐ. நா. சபையின் பொதுச் செயலாளரின் பெயர் என்ன?
கொபி அனான்

02. குழு 8 என அழைக்கப்படும் நாடுகளில் இறுதியாக இணைந்த நாடு எது?
ரஸ்சியா

03. “சாத்தானின் கதை” என்ற நாவலை எழுதியவர் யார்?
சல்மான் ருஸ்டி

04. அரசாங்க அறிவுறுத்தல்களை தாங்கி வரும் அரச செய்திமடல் எது?
வர்த்தகமானி

05. “மிக்கி மவுஸ்” என்னும் உலகப் புகழ் பெற்ற காட்டூன் ஓவியங்களை வரைந்தவர் யார்?
வால்ட் டிஸ்நி

06. பாராளுமன்ற சபாநாயகரின் உத்தியோக வாசஸ்தலத்தின் பெயர் என்ன?
மும்தாஜ்மகால்

07. உலகில் அதிக நாடுகளை கொண்ட கண்டம் எது?
ஆபிரிக்கா

08. அடுத்த ஒலிம்பிக் போட்டி எந்த நகரில் நடைபெறும்?
சிட்னி

09. டன்லப் என்பவர் கண்டுபிடித்த பொருள் என்ன?
சைக்கிள் டியுப்

10. சாரணர் இயக்கத்தினை தொடங்கியவர் யார்?
பேட்டன் பவுல்

11. உலகின் மிகச் சிறிய நாடு எது?
வத்திக்கான்

12. நோபல் பரிசு பெற்ற முதலாவது இந்தியர் யார்?
ரவீந்திரநாத் தாகூர்

13. ஏழு குன்றுகளின் நகரம் எனப்படுவது எது?
ரோம்

14. மனிதனுக்கு உடம்பு வியர்ப்பது போல் நாய்க்கு எங்கே வியர்க்கும்?
நாக்கில்

15. ஒளியானது ஏழு வகை ஒளிகளினுடைய தொகுப்பால் தான் ஏற்படுகின்றது என்ற உண்மையை ஆராய்ந்து கண்டுபிடித்தவர் யார்?
சேர் ஐசாக் நியூட்டன்

16. IRA என்ற அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் யார்?
ஜெரி அடம்ஸ்

17. இத்தாலி நாட்டு நாணயத்தின் பெயர் என்ன?
லிரா

18. ஒரு கப்பலின் மேல் தளத்தில் மஞ்சள் கொடி பறக்க விடப்பட்டால் அதன் கருத்து என்ன?
பயணிகளுக்கு தொற்று நோய் உள்ளது என்ற அறிவிப்பாகும்.

# GROUP 5

01. CIA என ஆங்கிலத்தில் சுருக்கமாக குறிப்பிடப்படும் அமைப்பின் விரிந்த பதம் என்ன?
Central Interlligent Agency

02. பறவையினங்களில் பறக்கத் தெரியாத பறவை எது?
பென்குயின், கிவி

03. எந்த இன மக்களின் உரிமைகளுக்காக NATO அமைப்பு யூக்கோஸ்லவேக்கியா மீது குண்டு மழை பொழிந்து வருகின்றது?
அல்பேறி வம்சாவழியினர்

04. உலகில் அதிகளவு தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடு எது?
இலங்கை

05. எவரெஸ்ட் சிகரத்தினை முதன் முதல் தொட்ட பெண்மணி யார்?
Tabei Junko ரபேஸ் யுன்கோ

06. இன்சுலின் மருந்தினை கண்டுபிடித்தவர் யார்?
பான்டிங்

07. Anthrpology என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சொல்லின் மூலம் எத்துறையை சார்ந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது?
மானிடவியல் (மனித கலாச்சாரம்)

08. சர்வதேச அளவில் பல நாடுகளிலும் குற்றவாளிகளை கண்டுபிடிக்க உதவும் பொலிஸ் அமைப்பு எது?
INTERPOL

09. பாராளுமன்றம் ஒன்றில் கேள்வி நேரம் (Question hour) என்பது எதனைக் குறிக்கும்?
உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் விடை தரும் நேரம்

10. முதன் முதல் மனிதனை விண்வெளிக்கு கொண்டு சென்ற விண்கலத்தின் பெயர் என்ன?
பொஸ்தோக் I

11. கம்போடியா என முன்னர் அழைக்கப்பட்ட நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
கம்பூச்சியா

12. சர்வதேச தொழிற்தாபனம் எவ்விடத்தில் அமைந்துள்ளது?
ஜெனிவா

13. பொருளியலுக்காக நோபல் பரிசு பெற்ற இந்தியர் யார்?
அமார்டியா சென்

14. The Ancient history of Ceylon என்னும் நூலை எழுதியவர் யார்?
றொபேட் றொக்ஸ்

15. விம்பிள்டன் மைதானத்தில் விளையாடப்படும் சர்வதேச விளையாட்டுப் போட்டி எது?
டெனிஸ்

16. கொசோவா பிரச்சனையில் இராஜதந்திர தீர்வைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ரஸ்சிய தூதுவர் யார்?
செனோ மிர்டின்

17. 1999ம் ஆண்டு யூன் மாதத்தில் ஓய்வு பெறப்போகும் ஆபிரிக்க கண்டத்தினை சேர்ந்த சனாதிபதி யார்?
நெல்சன் மண்டேலா

18. மே மாதம் 05ம் திகதி அரச திணைக்களமொன்று தனது 75வது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்தது. அது எது?
தொழிற் திணைக்களம்

19. யாழ்ப்பாண சரித்திரம் என்னும் நூலை எழுதியவர் யார்?
பேராசிரியர் சிற்றம்பலம்

20. உலக சிக்கன தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
Oct 31st

# GROUP 6

01. இலங்கையின் கல்வி, உயர்கல்வி பிரதி அமைச்சர் யார்?
Dr. விஸ்வ வர்ண பாலா

02. இலங்கையின் நிதியமைச்சர் யார்?
சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக் குமார துங்கா

03. சீதா எலிய விதை ஆராய்ச்சி நிலையத்தில் எப்பயிர் விதை உற்பத்தி செய்யப்படுகின்றது?
உருளைக்கிழங்கு

04. CTBT என்ற சர்வதேச உடன்பாடு எதற்காக பயன்படுத்தப் படுகின்றது?
அணு ஆராய்ச்சி தடை ஒப்பந்தம்

05. உலகில் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யும் நாடு எது?
இந்தியா

06. இலங்கைப் பாராளுமன்றத்திற்கு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எத்தனை பேர்?
196 பேர்

07. மார்ச்சு மாதம் 22ம் திகதி சர்வதேச தினங்களில் ஒன்று கொண்டாடப்படுவது வழக்கம். அது எது?
உலக நீர் தினம்

08. உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரம் இப்பெயர் பெறுவதற்கு காரணம் என்ன?
இதன் உயரம் முதன்முதல் ஜோர்ஜ் எவரெஸ்ட் என்னும் இந்தியரால் அளக்கப்பட்டது.

09. BOAC விமான சேவை எந்த நாட்டிற்கு சொந்தமானது?
பிரித்தானியா

10. புகையிலையிலுள்ள இரசாயனப் பொருள் எது?
நிக்கோடின்

11. புகழ்பெற்ற பேரணிகளுக்கு பெயர் பெற்ற இடமான "செஞ்சதுக்கம்" எங்கேயுள்ளது?
Moscow

12. NATO என்ற ஆங்கிலச் சொல்லின் விரிந்த ஆங்கிலப் பொருள் என்ன?
North Atlantic Treaty Organization

13. NATO அணியில் முன்னாள் மூன்று வார்சோ (Warso) ஒப்பந்த நாடுகள் இணைந்துள்ளன. அந்நாடுகள் ஒன்று கூறுக.
கங்கேரி, செக்கோரீ, லவேக்கியா, போலந்து.

14. தண்ணீர அருந்தாமல் நீண்ட காலம் உயிர வாழக்கூடிய பிராணி என விஞ்ஞானிகள் கூறிய பிராணி எது?
எலி

15. கண்பார்வையற்றவர்கள் கல்வி கற்பதற்கான முறையினை கண்டுபிடித்தவர் யார்?
லூயி பிரேய்லி

16. இராமாயணத்தினை முதன் முதல் எழுதியவர் யார்?
வால்மீகி

17. உலகின் No. 1 செஸ் விளையாட்டு வீரர் யார்?
கார்ரி கஸ்பரோ

18. கிரிக்கட் டெஸ் போட்டிகளில் அதிகம் கலந்து கொண்ட கிரிக்கட் வீரர் யார்?
சுனில் கவாஸ்கார்

19. ஓசோன் படை மண்டலம் புவிமேற்பரப்பில் இருந்து சுமார் எத்தனை கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளது?
12 km

20. CIH என்று அழைக்கப்படும் கணனி வைரசினை பரவவிட்ட நபரின் பெயர் என்ன?
சென்

# GROUP 7

01. முதன் முதல் உத்தியோக பூர்வமான ஒலிம்பிக் பந்தயம் எந்த நகரத்தில் நடைபெற்றது?
ஏதென்ஸ்க

02. "கம்பரெலியா" என்ற புகழ்பெற்ற நாவலை எழுதிய இலங்கையர் யார்?
மாட்டின் விக்கிரமசிங்க

03. லெஸ்டர் ஜேம்ஸ் பீரீஸ் என்னும் புகழ்பெற்ற இலங்கையர் எத்துறையோடு தொடர்பு கொண்டவர்?
சினிமா

04. தேசங்களின் செல்வம் என்ற நூலை எழுதியவர் யார்?
அடம் ஸ்மித்

05. அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம் தனது குறியீடாக எதனைப் பயன்படுத்துகின்றது?
செம்பிறை

06. WTO என்ற சர்வதேச அமைப்பின் விரிந்த பதம் என்ன?
World Trade Organization

07. UNESCO தாபனத்தின் தலைமையகம் எந்த நாட்டில் உள்ளது?
பிரான்சு

08. பிரான்சு நாட்டின் சனாதிபதியின் பெயர் என்ன?
யக் சிராக்

09. உலக சுற்றாடல் தினம் எத்தனையாம் திகதி கொண்டாடப் படுகின்றது?
June 05

10. "பதர் பாஞ்சாலி" என்னும் திரைப்படத்தின் இயக்குநர் யார்?
சத்தியயித்ரே

11. இலங்கையில் ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
நாவின்ன

12. சர்வதேச மட்டத்திற்கு புகழ்பெற்று வரும் இந்திய செஸ் விளையாட்டு வீரர் யார்?
விஸ்வநாத் ஆனந்

13. KLM என்ற விமான சேவை எந்த நாட்டிற்கு சொந்தமானது?
Holand

14. டயுள்யூப் நதி எந்தக் கண்டத்தில் காணப்படுகின்றது?
ஐரோப்பா

15. ஏரிக்கரை பத்திரிகை தாபனத்தினால் வெளியிடப்படும் மாதாந்த தமிழ் சஞ்சிகையின் பெயர் என்ன?
அமுது

16. யூகோஸ் லகேக்கியா கூட்டமைப்பு நாட்டில் இருந்து தனியரசு கோரி போராடி வரும் பிராந்தியம்
கொசோவோ

17. X – Ray கதிர்களை கண்டு பிடித்தவர்.
Rontgen

18. அணுவை பிளக்க உதவும் கருவியின் பெயர் என்ன?
சைக்ளோட்ரான்

19. இலங்கையில் எத்தனை வெளிநாட்டு வங்கிகள் காணப் படுகின்றன?
18

# GROUP 8

01. J. J. சில குறிப்புக்கள் என்னும் புகழ் பெற்ற நாவலை எழுதிய தமிழ் நாட்டு எழுத்தாளர் யார்?
சுந்தர ராமசாமி

02. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ எது?
குறிஞ்சி மலர்

03. யூகோஸ்லவேக்கியா நாட்டின் தலைநகர் எது?
பெல்கிறேட்

04. அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவியிலும் அவ்வமைப்பின் தாபகர்களில் ஒருவருமாய் இருந்த முன்னாள் யூகோஸ்லவேக்கிய நாட்டு அதிபர் யார்?
மார்ஷல் டிட்டோ

05. லீப் வருடமொன்றில் எவ்வளவு நாட்கள் இருக்கும்?
366

06. முதன் முதல் கிரிக்கட் விளையாட்டு தோன்றிய இடம் எது?
இங்கிலாந்து

07. ICRC என்ற ஆங்கிலச் சொல்லின் விரிந்த ஆங்கிலப் பொருள் கருத்து என்ன?
International Committee for Red Cross

08. தமிழில் முதன் முதல் இலக்கண நூலைப் படைத்தவர் யார்?
அகத்தியர்

09. தமிழில் முதன் முதல் அகராதியினை உருவாக்கியவர் யார்?
வீரமா முனிவர்

10. இலங்கையில் காற்று விசையால் மின்சாரத்தினை பாரியளவில் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ள இடம் எது?
அம்பாந்தோட்டை

11. உளவியல் சிகிச்சை முறையை முதலில் அறிமுகப்படுத்தியவர் யார்?
சிக்மன் புரோய்ட்

12. விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் விண்கலத்தின் பெயர் என்ன?
ஸ்புட்னிக் - 1

13. நைஜீரியாவில் நீண்ட காலத்திற்குப் பின்னர் சனநாயக தேர்தல் மூலம் சனாதிபதி ஒருவர் தேர்ந்து எடுக்கப்பட்டார். அவரின் பெயர் என்ன?
ஜெனரல் ஒலுசுகள் ஒபசன்ஜோ

14. கடந்த வருடம் 11 ஆஸ்கார் விருதினைப் பெற்ற திரைப்படம் எது?
Titanic

15. எமது பால் வீதிக்கு அருகில் உள்ள அடுத்த விண்வெளித் தொகுதியின் பெயர் என்ன?
அன்றோமிடோ (Andromido)

16. விசர் நாய் கடியினால் ஏற்படும் நோயின் பெயர் என்ன?
ஹைட்ரோ போபியா

17. "தாய்" என்ற உலகப் புகழ் பெற்ற நாவலை எழுதியவர் யார்?
மாக்சிம் கோர்க்கி

18. கிறீன்பீஸ் (Green peace) என்னும் சர்வதேச அமைப்பு எதற்காக போராடி வருகின்றது?
சூழல் மாசடைதலைத் தடுக்க

19. பாலியல் குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க சனாதிபதி ஒருவர் குற்றவியல் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். குற்றச்சாட்டினை சுமத்தியவரின் பெயர் என்ன?
மொனிக்கா லூவின்சி

20. பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் சிற்பியாக தேசிய கல்வி நிறுவனத்தில் கடமையாற்றுபவர் யார்?
ஆதர் வெதமுல்லை

# GROUP 9

01. புவி நடுக்கத்தினை அளக்கும் கருவியின் பெயர்?
செயிஸ்மோகிறாவ் Scismograph

02. 1999 உலக கிண்ண கிரிக்கட் போட்டியில் கலந்து கொள்ளும் மே. இந்திய தீவு அணியின் தலைவர் யார்?
பிரயன்லாரா

03. இந்தியாவின் புகழ்பூத்த குடிமகனில் ஒருவரான "மிருணாள் சென்" எந்த துறையுடன் தொடர்பு கொண்டவர்?
சினிமா

04. நவம்பர் மாதம் 13ம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச தினம் என்ன?
உலக சிறுவர் தினம்

05. உலக வானிலை தாபனத்தின் தலைமையகம் எங்குள்ளது?
ஜெனிவாவில்

06. இந்தியாவில் ஏறக்குறைய எத்தனை மொழிகள் பேசப் படுகின்றன?
1625 மொழிகள்

07. சர்வதேச முதியோர் ஆண்டாக எந்த ஆண்டு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது?
1999

08. இந்தோனேசியாவில் இருந்து பிரிந்து தனியரசு அமைப்பதற்கான கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு போர்த்துக்கலுடன் இந்தோனேசியா ஒப்பந்தம் செய்துள்ளது. அந்தப் பகுதி எது?
கிழக்குத் திமோர்

09. இலங்கையில் எத்தனை வர்த்தக வங்கிகள் காணப்படுகின்றன?
26

10. "புத்துயிர்ப்பு" என்னும் புகழ்பெற்ற நாவலை எழுதியவர் யார்?
டொலஸ்ரோல்

11. PTI என்ற பத்திரிகைச் செய்தி நிறுவனத்தின் விரிந்த ஆங்கிலப் பதம் என்ன?
Press Trust of India

12. "யூராசிக் Park" என்ற அதிக வசூலை ஈட்டிக் கொடுத்த அமெரிக்க திரைப்படத்தின் இயக்குநர் யார்?
ஸ்டிபன் ஸ்பீல்பேக்

13. குங்பு என்ற தற்காப்பு யுத்தக்கலை எந்த நாட்டில் பிரபல்யமாக இருந்து வருகின்றது?
சீனா

01. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் மிகப் பெரிய நீர்த் தேக்கம் எது?
ரந்தெனிகல

02. உணவு விவசாய ஸ்தாபனத்தின் (FAO) தலைமைச் செயலகம் எங்குள்ளது?
ரோம்

03. 1999 மே மாதம் சர்வதேச மலர்க் கண்காட்சி எந்த நாட்டில் நடைபெற்றது?
சீனா

04. ஸ்டெதஸ்கோப்பினைக் கண்டுபிடித்தவர் யார்?
Dr. ரெனிலக்

05. ஏரோபிளைட் என்ற விமான சேவை நிறுவனம் எந்த நாட்டிற்குச் சொந்தமானது?
ரஸ்சியா

06. 1999 உலக கிரிக்கெட் போட்டி அணியில் எத்தனை நாடுகள் பங்கு கொள்கின்றன?
12

07. யூராசிக் Park என்னும் ஆங்கிலத் திரைப்படம் அதிக வசூலை ஈட்டிக் கொடுத்தது. அத் திரைப்படத்தின் இயக்குநர் யார்?
ஸ்பீல் பேர்க்

08. 1999 மார்ச் மாதம் 10ம் திகதி G – 15 என்னும் குழுவில் புதிதாகச் சேர்ந்து கொண்ட நாடு எது?
இலங்கை

09. 1997 ல் உலகில் மிகச் சிறந்த விமான சேவை விருதினைப் பெற்ற விமான சேவைக் கம்பனி எது?
எமிரேட் ஏயார் லைன்

10. 12ம் திகதி 10ம் மாதம் கொண்டாடப்படும் சர்வதேச முக்கிய தினம் எது?
சர்வதேச முதியோர் தினம்

11. அறிவு வளர்ச்சி அதிகம் உள்ள கடல் வாழ் பிராணி எது?
டொல்பின்

12. சர்வதேச காதலர் தினம் எத்தனையாம் திகதி கொண்டாடப் படுகிறது?
பெப்ரவரி 14

13. குங்பூ என்ற தற்காப்பு யுத்தக்கலை எந்த நாட்டில் பிரபல்யமாக இருந்து வருகின்றது?
சீனா

14. மகாத்மா காந்தியினால் எழுதப்பட்ட சுயசரிதையின் பெயர் என்ன?
சத்திய சோதனை

15. இன்ரநெற் தகவல் தொடர்பு முறையில் ஆங்கிலத்தில் WWW என சுருக்கமாகக் குறிப்பிடப்படும் எழுத்தின் பொருள் என்ன?
World Wide Web


**கங்கை**

**கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ**

*(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)*

*நாவலர் றோட், யாழ்ப்பாணம்.*